

சிகிச்சை பெற்ற சச்சினுடன் டாக்டர்கள்.

12 ஆண்டுகளாக

# நரம்பு பாதிப்பால் அவதிப்பட்ட வாலிபரை நடக்க வைத்தனர்

## கே.எம்.சி.எச். டாக்டர்கள் சாதனை

கோவை, அக். 11–
மங்களூரை சேர்ந்தவர் சச்சின் (வயது 23). கடந்த 12 ஆண்டாக மோட்டார் நியூரோபதி என்ற நரம்பு பிரச்சினையால் அவதிப்பட்டு வந்தார். சக்கர நாற்காலியே கதியாகி விட்ட அவருக்கு பெற்றோர் தான் அனைத்து உதவிகளையும் செய்து வந்னர். இந்த நிலையில் சச்சின் என்ஜினீயரிங் படிப்பையும் மனம் தளராமல் படித்து வந்தார்.

எத்தனை நாளைக்கு தான் இப்படி அவதிப்படுவது என சிந்தித்த சச்சின் உரிய சிகிச்சை பெற முடிவு செய்தார். அதன்படி கோவை யில் உள்ள கே.எம்.சி.எச். ஆஸ்பத்திரிக்கு வந்தார். நரம்பியல் சிகிச்சை நிபுணர் டாக்டர் அருள்செல்வன் அவரை பரிசோதித்தார்.

அப்போது உடல் இயக்கத்தின் நோய் தடுப்புச் செயல்பாட்டில் ஏற்பட்ட மாறுதலால் உடல் இயக்கமே நரம்புகளின் மேலுறையை தாக்கி அழித்து விடும் 'மோட்டார் நியூரோபதி' என்ற நரம்பு பிரச்சினையால் பாதிக்கப்பட்டு இருந்தது தெரிய வந்தது.

இதைடுத்து 'ரிட்டுஷிமப்' என்ற ஊசி மருந்து மாதம் இருமுறை என இரண்டு மாதத்திற்கு சச்சினுக்கு அளிக்கப்பட்டது. இந்த ஊசி பலன் அளித்ததை தொடர்ந்து சச்சின் நடக்க தொடங்கினார். இது குறித்து கே.எம்.சி.எச். மருத்துவமனையின் தலைவர் டாக்டர் நல்லா ஜி.பழனிசாமி கூறியதாவது:–

இது போன்ற நரம்பு பிரச்சினைகளை ஆரம்ப நிலையிலேயே கண்டு பிடித்து சிகிச்சை அளித்தால் உடலில் ஏற்படும் பெரும் பாதிப்புகளை தவிர்க்க முடியும். நரம்புகளின் மேற்புறத்தில் இருந்து தான் மூளைக்கும், மூளையில் இருந்து தகவல்கள் மற்ற பகுதிகளுக்கும் பரிமாற்றம் செய்யப்படுகிறது.

பெரிபரல் நியூரோபதி என்ற நரம்பு பாதிப்புகள் நரம்பு, மூளை, தண்டு வட செயல்பாடுகளை முடக்கிவிடும்.

சர்க்கரை நோய், நீண்ட கால மதுப்பழக்கம், வைட்டமின் பி 12 குறைபாடு, புற்று நோய் மருந்துகளால் இது போன்ற பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

கை, கால் பகுதிகளில் மரமரப்புத்தன்மை, ஊசி குத்துவது போல உணர்வது, எதையும் பிடித்துக் கொள்ள முடியாமல் கை நழுவுதல், தள்ளாட்டம் போன்ற பாதிப்புகள் ஏற்படும் என்றார்.